**சுருக்கம்**

பள்ளிக் கல்வி – கருணை அடிப்படையில் பணி நியமனம் – செல்வி.ச.பர்ஜானா பாத்திமா, தா/பெ. (மறைந்த) திருமதி.பா.ஷகிலா பேகம், பட்டதாரி ஆசிரியர், நகரவை உயர்நிலைப் பள்ளி, கோட்டை, நாமக்கல் மாவட்டம் – இளநிலை உதவியாளர் பதவியில் 14.10.2022 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

**பள்ளிக்கல்வித்[ப.க.3(2)] துறை**

**அரசாணை (3ப) எண்.** 08

**நாள் 14.09.2023**
திருவள்ளுவர் ஆண்டு 2054
**சோபகிருது, ஆவணி 28**

**படிக்கப்பட்டவை:–**

1. அரசாணை(நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள் 23.01.2020.
2. பள்ளிக் கல்வி ஆணையரின் கடித ந.க.எண். 021710/ஜே/இ1/2023, நாள் 27.05.2023

********

**ஆணை:–**

நாமக்கல் மாவட்டம், கோட்டை, நகரவை உயர்நிலைப் பள்ளியில், பட்டதாரி ஆசிரியராகப் பணிபுரியும் போது திருமதி.பா.ஷகிலா பேகம் என்பார், பணிக்காலத்தில் 25.02.2014 அன்று காலமானார் என்றும், அவரது வாரிசுதாரரான, அன்னாரது மகள் செல்வி.ச.பர்ஜானா பாத்திமா என்பவர் கருணை அடிப்படையில் பணிவாய்ப்பு கேட்டு 04.07.2016 அன்று விண்ணப்பித்தார் என்றும், அவரது பிறந்த நாள் 12.11.1995 என்றும், அவர் இடைநிலைக் கல்வி (எஸ்.எஸ்.எல்.சி) பள்ளியிறுதி வகுப்புப் பொதுத் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளார் என்றும், இவருக்குப் பணிவாய்ப்பு வழங்குவதற்கு இதர வாரிசுதாரர்கள் மறுப்பு ஏதும் தெரிவிக்கவில்லை என்றும், அவரது குடும்பம் வறிய சூழ்நிலையில் இருந்தது என்றும், பணியில் இருக்கும்போது காலமான அரசுப் பணியாளர்களின் வாரிசுதாரருக்குக் கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கும் திட்டப்படி, செல்வி.ச.பர்ஜானா பாத்திமா என்பவர் இளநிலை உதவியாளராக 14.10.2022 முற்பகல் முதல் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் பள்ளிக்கல்வித் துறையில்

தற்காலிகமாகப் பணியமர்த்தப்பட்டார் என்றும், எனவே, அன்னாரின் பணியினை வரன்முறை செய்யுமாறு மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் பள்ளிக்கல்வி ஆணையர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட பள்ளிக்கல்வி ஆணையரின் பரிந்துரையை, மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி, அரசு நன்கு ஆய்வு செய்து, நாமக்கல் மாவட்டம், கோட்டை, நகரவை உயர்நிலைப் பள்ளியில் பட்டதாரி ஆசிரியராகப் பணிபுரியும்போது பணிக்காலத்தில் பணியிடை காலமான திருமதி.பா.ஷகிலா பேகம் என்பவரின் வாரிசான அவரது மகள் செல்வி.ச.பர்ஜானா பாத்திமா என்பவர் கருணை அடிப்படையில், தமிழ்நாடு அமைச்சுப் பணியில், பள்ளிக்கல்வித் துறையில் இளநிலை உதவியாளர் பதவியில் 14.10.2022 முற்பகல் முதல் பணிநியமனம் செய்யப்பட்டு பணிபுரியும், அவரது பணியினை வரன்முறைப்படுத்திட, அவர் தேவையான உடல் தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன், அவர் பணியில் சேர்ந்த நாளான 14.10.2022 முற்பகல் முதல் வரன்முறை செய்யலாம் என முடிவு செய்து, அவ்வாறே அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு முன்னாளிட்டு பணிவரன்முறை செய்யப்படுவதால், அவர், ஆண்டு ஊதிய உயர்வுகள் மற்றும் ஊதிய நிலுவை இருப்பின் அவற்றை விதிகளின்படி பெறத் தகுதியுடையவராகிறார்.

3. இவ்வரசாணை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை மற்றும் மனிதவள மேலாண்மைத் துறையின் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**காகர்லா உஷா**
**அரசு முதன்மைச் செயலாளர்**

**பெறுநர்**
பள்ளிக்கல்வி இயக்குநர், சென்னை–6.
தனியர் (பள்ளிக்கல்வி இயக்குநர் வழியாக)
**நகல்**
தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை,
சென்னை–9
மனித வள மேலாண்மைத் துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

**பிரிவு அலுவலர்**
19/9/23

// பாதுகாப்பாக//

நாமக்கல் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

மூ.மு.எண்.3498/ஆ4 /2023 நாள்: .11.2023

பொருள் : பணிவரன்முறை – நாமக்கல் மாவட்டம் – காளப்பநாயக்கன்பட்டி, அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் இளநிலை உதவியாளராகப் பணிபுரியும் திருமதி.ச.பர்ஜானாபாத்திமா என்பாருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணை பெறப்பட்டது – தொடர்பாக.

பார்வை : 1) இவ்லுவலக கடித ந.க.எண்.3498/ஆ4/2023 நாள். 11.05.2023.

2) அரசாணை (3ப) எண்.08 பள்ளிக் கல்வித் (பக3(2))த் துறை நாள்.14.09.2023.

3) சென்னை–6 தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (பணியாளர்.தொகுதி) செயல்முறைகள் ந.க.எண்.021710/ஜே/இ1/2023, நாள்.06.10.2023.

---------

நாமக்கல் காளப்பநாயக்கன்பட்டி, அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் இளநிலை உதவியாளராகப் பணிபுரியும் திருமதி.ச.பர்ஜானாபாத்திமா என்பாருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை ஆணை வேண்டிய கருத்துருக்கள் பார்வை 1ல் காணும் இவ்வலுவலக கடிதத்தின்படி பள்ளிக் கல்வி இணை இயக்குநருக்கு (பணியாளர் தொகுதி) பணிந்தனுப்பப்பட்டது. அன்னாருக்கு பார்வை 2இல் காணும் அரசாணையின்படி பணிவரன்முறை செய்து வெளியிடப்பட்ட ஆணை பார்வை 3ல் காணும் கடிதத்தின் மூலம் பெறப்பட்டுள்ளது.

எனவே பெறப்பட்டுள்ள அசல் அரசாணை மற்றும் பணிப்பதிவேடு அசல் சம்மந்தப்பட்டவருக்கு வழங்கும் பொருட்டு இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது. மேலும் அசல் அரசாணை மற்றும் அசல் பணிப்பதிவேடு பெற்றுக் கொண்டமைக்கு ஒப்புதல் வழங்க சார்ந்த சார்ந்த பள்ளித் தலைமையாசிரியருக்குத் தெரிவிக்கப்படுகிறது.

3/5

முதன்மைக் கல்வி அலுவலர்
நாமக்கல்.

28/11/23

இணைப்பு

1) அரசாணை – அசல்
2) பணிப்பதிவேடு – அசல்

பெறுநர்: சம்மந்தப்பட்ட பணியாளர் (உரிய வழியாக).

நகல்: தலைமையாசிரியர், அரசு ஆண்கள்மேல்நிலைப்பள்ளி, காளப்பநாயக்கன்பட்டி, நாமக்கல் மாவட்டம்.